**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாள் திங்கள்கிழமை**
**IA.04/2025 in OS.36/2011**

1. வேல்முருகன்,
2. சாவித்திரி. ... மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள்

/எதிர்/

சுப்பிரமணியன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 03.02.2026–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.திருமால்சோழன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ஜெயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது அசல் வழக்கில் கடந்த 03.12.2024ம் தேதி மனுதாரர்கள்/3,4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவாக வேண்டி ஆர்டர் 9 ரூல் 7ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3ம் மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும், மேற்படி 4 பிரதிவாதி தனது தாயார் என்றும், மனுதாரருக்கும் தனது தாயாரான 4ம் மனுதாரருக்கும் ஒரே கட்சி என்பதால் அவருக்காகவும் சேர்த்து இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன் என்றும், அசல் வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 03.12.2024 தேதியன்று வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த காலத்தில் மனுதாரருக்கு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் இருதைய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தொடர் சிகிச்சை பெற்று வந்தேன் என்றும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரரால் வழக்கறிஞரை சந்தித்து தகவல் அளிக்க

இயலவில்லை என்றும், எனவே கடந்த 03.12.2024 அன்று எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1யை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு ஏற்பட்டுள்ளது என்றும், மனுதாரர் உடல்நிலை சரியாகிய பின் மனுதாரர் தற்போது தனது வழக்கறிஞரை சந்தித்து வழக்கின் விவரம் குறித்து கேட்ட போதுதான் மேற்படி எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1யை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் முடிக்கப்பட்ட விவரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், இது வேண்டுமென்றோ அலட்சியத்தினாலோ ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக நடந்த ஒன்று என்றும், ஆகவே கடந்த 03.12.2024ம் தேதி மனுதாரர்கள்/3,4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவாக வேண்டுமென்று மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

3. மனுதாரரின் மனுவின் அபிடவிட்டில் மனுதாரரர்கள் சொல்லப்பட்ட சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவற்றை 3,4 பிரதிவாதிகள் கண்டிப்பாக நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர்கள் என்றும், கடந்த 03.12.2024 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த காலத்தில் மனுதாரருக்கு சென்னையுள்ள தனியார் மருத்துவமனையில் இருதய அறுவைசிகிச்சை செய்யப்பட்டு தொடர் சிகிச்சைப் பெற்று வந்தேன் என்றும், விசாரணைகாலத்தில் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு நீதிமன்றம் உத்திரவிட்டது என்றும், மனுதாரர்கள் வெளியூரில் வசிப்பதால் அவர்களுக்கு தகவல் சொல்லி மனுதாரரால் வழக்கின் வாய்தா தேதியை தெரிவித்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராக கூறமுடியவில்லை என்று குறிப்பிட்டு எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் முடிக்கப்பட் விவரம் தற்பொழுதுதான் வழக்கறிஞரை அணுகி கேட்டபொழுதுதான் தெரியவந்தது என்று கூறுவது பொய்யானது என்றும், கடந்த 10 மாதத்திற்கு மேலாக வழக்கின் தன்மையை தெரிந்துக்கொள்ளாமல் இருந்துவிட்டு அலட்சியத்தின்பால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது என்றும், வழக்கில் 3ம் மனுதாரர் வேல்முருகன் உடல்நிலை

பாதிக்கப்பட்டது என்பதற்கு எந்த விதமான மருத்துவ சீட்டுகளும் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், இதிலிருந்து 3ம் மனுதாரருக்கு மனுப்படியான எந்த இருதய அறுவைசிகிச்சையும் நடைபெறவில்லை என்பது தெளிவாகிறது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடைதல்ல என்றும், ஆகவே மனுதாரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

6. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, 20.12.2023ல் விசாரணை பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா 16.08.2024 அன்று மாற்றப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் வாதி ஆஜராகி இருந்தார். பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் மேற்படி வாய்தா 06.09.2024 க்கு மாற்றப்பட்டு அன்று பிரதிவாதி ஆஜராகவில்லை. மேற்படி வாய்தா 20.09.2024 முதல் 03.12.2024 வரை இருந்தநிலையில் வாதியும், வாதியின் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் பிரதிவாதிகளுக்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும் வாதியை குறுக்கு விசாரணை செய்யாததால் கடந்த 03.12.2024 அன்று பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகளை தோன்றாதரப்பினராக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் இந்த

மனுவை தாக்கல் செய்துள்ளதை பார்க்கையில் பிரதிவாதிகள் அசல் வழக்கில் கலந்துகொண்டு வழக்கை மேல்நடத்த முன்வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேற்படி அதனை பார்க்கும் போது மனுதாரரின் மனுவினை அனுமதித்து இருதரப்பிலும் விசாரணை செய்யப்பட்டு அதன் மூலம் பிறப்பிக்கப்படும் தீர்வு என்பது ஒரு அறுதியிட்ட தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின் உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேற்படி மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. எனவே முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு **ரூ.1000/-**யை வரும் **19.02.2026**ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.**19.02.2026**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09-ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:**

- இல்லை -

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.